ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2141/50 - 2019 සැප්තැම්බර් මස 18 වැනි බදාදා - 2019.09.18

*2141/50 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2133/ 4 ஆம் இலக்க, 2019.07.22 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல்களை திருத்துவதற்கான வர்த்தமானி அறிவித்தல்கள்**

பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சராகிய பாட்டலி சம்பிக்க றணவக்க ஆகிய நான் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து உடனடியாக உறுப்பினர்களின் பட்டியலை இணைக்குழுமுகமாக நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் கீழ் 2133/4 ஆம் இலக்க, 2019.07.22 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிட்ட விடயங்களில் பின்வரும் உப பிரிவுகளை ஒன்றிணைத்து திருத்தங்களை மேற்கொண்டு வர்த்தமானி அறிவித்தலை செயற்படுத்துதல்.

1. ஆலோசனைக் குழு அதிகாரம் மிக்கதாகச் செயற்படுவதோடு தரப்பட்ட விடயப்பரப்பு விடயங்கள் மற்றும் விடயப்பரப்பில் முக்கியத்துவம் குறைந்த விடயங்களோடு சம்பந்தப்பட்ட விடயங்கள் மற்றும் அனைத்துப் பொறுப்புக்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பாக அமைச்சருக்கு ஆலோசனை வழங்குவதோடு செயற்திறனுடனும் செயலூக்கத்துடனும் செயற்படுதல்.

(அ) தேவையேற்படும் பட்சத்தில், வீடமைப்பு வசதிகளுடனான விசேட தேவைகள் தொடர்பாக விரிவான விசாரணைகளை மேற்கொள்ளுதல்.

(ஆ) தேவையேற்படும் பட்சத்தில் மிகப் பொருத்தமான சிபார்சுகளை வழங்குதல்.

(இ) பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் கீழ்வரும் நகர அபிவிருத்தி அதிகார சபையால் அமுல்படுத்தப்படும் நகர மீளுருவாக்கம் திட்டத்திற்கான விண்ணப்பதாரிகளின் கோரிக்கைகளை வரவேற்றல்.

2. அமைச்சர் இவை தொடர்பான சிபார்சுகளை வழங்கும்போது, எதிர்கால இலக்கு மற்றும் உபாய மார்க்கங்கள் தொடர்பாக ஆலோசனைகளை வழங்குவது இவ் ஆலோசனைக் குழுவின் தலையாகிய பொறுப்புக்கள் ஆகும்.

1A - G 31004 — 20 (2019/09)

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

3. அமைச்சர் விசேட மற்றும் பொதுவான வழியினை எழுத்துருவில், பொறுப்புக்களைச் செயற்படுத்துவதற்கும் ஆலோசனைக் குழுவின் அதிகாரங்களை உபயோகிப்பதற்கும் சில வேளைகளில் வழங்க முடியும். எனினும் ஆலோசனைக் குழுவே செயற்திறன்மிக்க பாதையினைக் காட்டுதல் வேண்டும்.

4. மேலதிக வேலை செயற்பாடுகளுக்கேற்ப இதன் கால எல்லை நீடிக்கப்படும் என்பதன் பேரில் ஆலோசனைக் குழுவின் அங்கத்தவர்களின் உத்தியோகபூர்வ காலம் ஆரம்பத்தில் 2019.07.01 ஆந் திகதியிலிருந்து 2020.07.01 ஆந் திகதி வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

5. அங்கத்தவர் ஒருவர் இராஜினாமா செய்து அலுவலகத்திலிருந்து வெளியேறினாலோ அல்லது அவரது காலம் முடிவடைந்து அலுவலகத்திலிருந்து வெளியேறினாலோ அவர் மீளவும் நியமனம் பெறுவதற்கு உரித்துடையவர் ஆவார்.

6. (அ) ஆலோசனைக் குழுவில் உள்ள எந்தவொரு உறுப்பினரும் அமைச்சருக்கு செயற்திறன் மிக்க கடிதத்தைச் சமர்ப்பிப்பதன் மூலம் தனது பதவியினை இராஜினாமாச் செய்துகொள்ள முடியும்.

(ஆ) உறுப்பினர் ஒருவர் உடல் நிலை பாதிப்பு மற்றும் இலங்கையிலிருந்து வேலைக்கு சமுகமளிக்கவில்லையாயின் அல்லது வேறு காரணங்களால் வேலைக்கு சமுகமளிக்கவில்லையாயின் அக்காலப்பகுதிக்கு வேறொருவரை இவ் உறுப்பினருக்குப் பதிலாக அமைச்சு நியமிக்க முடியும்.

7. அதிகார சபை தீர்மானித்ததன்படி ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் வேதனத்தை இந்நிதியிலிருந்து வழங்க முடியும்.

8. ஆலோசனைக் குழுவிற்கு இவ்விடயப் பரப்பின்கீழ் பொறுப்புக்களை முன்னெடுப்பதற்கு உதவுமுகமாக உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களை நியமிப்பதற்கான ஒப்புதலை ஆலோசனைக் குழு அமைச்சரிடமிருந்து பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

9. 2133/4 ஆம் இலக்க, 2019.07.22 ஆந் திகதிய முன்னைய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்படாத விடயங்கள் உப பிரிவுகளாக இங்கு சேர்க்கப்பட்டுள்ளதோடு முன்பு குறிப்பிட்டவைகள் 2019.07.22 ஆந் திகதி நடைமுறைக்கு வந்துள்ளன.

பாட்டலி சம்பிக்க றணவக்க (பா. உ.),
பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர்.

பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு,
17 மற்றும் 18 ஆம் மாடிகள்,
"சுஹுறுபாய",
ஸ்ரீ சுபுதிபுர வீதி,
பத்தரமுல்லை,
2019, செத்தெம்பர் 16.

10-80

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.